ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1641/51 – 2010 පෙබරවාරි 19 වැනි සිකුරාදා – 2010.02.19
1641/51 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III – காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் குமாரணதுங்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில், ஜே / 101 - நீராவியடி கிராம உத்தியோகத்தர் பிரிவில், யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட வட்டார இல. 23 இல், வண்ணார்பண்ணை வடகிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள, யாழ்ப்பாண மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2005.02.27 ஆம் திகதிய யா/ஜேஎப்/2004/099 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் துண்டு இல. 1, 2, 3 எனக் காட்டப்பட்ட சுமார் 0.1555 ஹெக்டயார் முழு விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த மூன்று (03) காணித் துண்டுகள் :

01. **துண்டு இல. 1 - நயனாதேவன் வளவு, பேத்தான் வளவு - விஸ்தீரணம்: 0.0042 ஹெக்டயார்.**

02. **துண்டு இல. 2 - நயனாதேவன் வளவு, பேத்தான் வளவு, வரி மதிப்பீட்டு இல. 60/6 கல்லூரி ஒழுங்கை - விஸ்தீரணம்: 0.0717 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 3, துண்டு இல. 1 மற்றும் சொக்கர வளவு ; கிழக்கு : சொக்கர வளவும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானமும் ; தெற்கு : இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானமும் துண்டு இல. 3 உம் ; மேற்கு : துண்டு இல. 3.

03. **துண்டு இல. 3 - நயனாதேவன் வளவு, பேத்தான் வளவு, வரி மதிப்பீட்டு இல. 60/5 கல்லூரி ஒழுங்கை - விஸ்தீரணம்: 0.0796 ஹெக்டயார்**

வடக்கு : கல்லூரி ஒழுங்கையும், துண்டு இல. 1 உம் 2 உம் ; கிழக்கு : துண்டு இல. 2 உம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானமும் ; தெற்கு : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம் ; மேற்கு : யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானமும் கல்லூரி ஒழுங்கையும்.

ஜீவன் குமாரணதுங்க,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : எல்டீ/05/2004/ஈ/14.
பிரதேச செயலாளர் இல. : என்ஏஎல்/டீஎஸ்/03/ஏஎல்/01.
80/5, "கொவிஜன மந்திரய",
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2009.09.22.

03 - 211

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.